සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
ග්‍රාමීය සංවර්ධන , සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබල ගැන්වීමේ අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | DSD/HO/08/PM/04/E.Power | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2025.05.22. |

**சமுர்த்திச் சுற்றறிக்கை இலக்கம்:- 2025/01 இற்கான இரண்டாவது பின்னிணைப்பு.**

அனைத்து மாவட்டச் செயலாளர்கள் /மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர்கள் நாயகம்,
மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்,
மாவட்ட பிரதி / உதவி பணிப்பாளர்களுக்கும்.

<u>சமூக வலுவூட்டல் வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல் - 2025</u>

<u>வலுவூட்டலுக்காக அடையாளம் காணப்பட்ட அஸ்வெசும சமூக நலன் புரி நன்மைகளை பெறுவோர் மற்றும் சமுர்த்தி நலனுதவி நன்மைகளை பெற்ற (தற்போது அஸ்வெசும சமூகநலனுதவி பெறாதவர்கள்) குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்குமான குடும்ப அபிவிருத்தி திட்டமிடலை தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல்.</u>

மக்களை வலுவூட்டும் வேலைத்திட்டம 2025 தினை செயற்படுத்துவது தொடர்பாக எனது சம இலக்க சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2025/01 மற்றும் அதன் முதலாவது பின்னிணைப்பு மூலம் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

02. அதன்படி, தங்களது மாவட்டத்தின் / பிரதேச செயலகப் பிரிவின் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் மேற்குறித்த குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் இருந்து பயனாளி குடும்பங்களை அடையாளங்காணல் மற்றும் அவர்களின் அடிப்படை தகவல்களை சேகரித்தல் போன்ற பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இங்கு, அஸ்வெசும சமூக நலன்புரி நன்மை பெறும் பயனாளிகளில் இருந்து இலக்குக் குடும்பங்களை அடையாளம் காணும் போது ஏற்கனவே சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் அஸ்வெசும பயனாளிகளின் பெயர் பட்டியல்களை வழங்கிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து மத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளில் அஸ்வெசும சமூக நலன்புரி நன்மைகளை பெறும் பயனாளிகள் தொடர்பாக நலனுதவி நன்மைகள் சபையுடன் கலந்துரையாடி உரிய பெயர் பட்டியல் பெறப்பட்டு எதிர்காலத்தில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

03. இச்சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணைப்பு 01 இல் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல் களுக்கு அமைய கீழ் குறிப்பிடப்படும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ள படிவத்தில் குடும்ப அபிவிருத்தி திட்டமிடலை தயாரிப்பதுடன் ஏனைய அடிப்படைத் தகவல்களையும் சேகரிக்கும் பணிகளை விரைவாகவும் மற்றும் சரியான விதத்திலும் மேற்கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

i. சமுர்த்தி நலனுதவி நன்மைகளை பெற்ற (தற்போது அஸ்வெசும சமூக நலன்புரி நன்மைகளை பெறாத) குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள்
ii. அஸ்வெசும சமூக நலன்புரி நன்மைகளை பெறும் பயனாளிக் குடும்பங்கள் (தற்போது பயனாளிகளிலன் பெயர் பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மட்டும்)

1වන අදියර,4 වන මහල , සෙත්සිරිපාය , බත්තරමුල්ල. / 1ம் கட்டம், 4 ... / 1st Step, 4 th floor, Sethsiripa

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி (நிர்வாகம்/தாபனம்)<br>Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி)<br>Director (Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |

04. குடும்ப அபிவிருத்தி திட்டமிடலை தயாரித்தல் தொடர்பாக திணைக்களத்தால் பயிற்றுவிக்கப்பட்ட பயிற்றுனர்களால் தற்போது சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கான பயிற்சிகள் மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது.

05. இச் சுற்றறிக்கையின் ஊடாக வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய செயற்பட்டு உரிய திகதிகளில் இந்நடவடிக்கைகளை முடிவுறுத்துவது தொடர்பாக கிராம அலுவலர் பிரிவுகளில் களக் கடமைகளில் ஈடுபட்டுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட ஏனைய தொடர்புடைய அனைத்து அலுவலர்களுக்கும் ஆலோசனைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

06. மேலும், தங்களது மாவட்ட / பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் நடைபெறும் அபிவிருத்திக் குழு, விவசாயக் குழுக் கூட்டங்கள் மற்றும் ஏனைய செயலமர்வுகள் / கலந்துரையாடல்களின் போது மக்களுக்கான சமூக வலுவூட்டல் திட்டம் குறித்து துறைசார் திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் இதனுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு தெளிவூட்டி அன்நிறுவனங்களின் உதவிகளை /சேவைகளை இத் திட்டத்துடன் ஒருங்கிணைக்க பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்குமாறும் தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திட்டமிட்டபடி குடும்ப வலுவூட்டல் திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கு தங்களது ஆதரவையும் மற்றும் அர்ப்பணிப்பையும் பெரிதும் எதிர்பார்க்கிறேன்.

சி.டி. களுஆராச்சி,
பணிப்பாளர் நாயகம்.

**பிரதிகள்**:-

1. செயலாளர், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு - தகவலுக்காக.
2. மேலதிக செயலாளர்(சமூக வலுவூட்டல்), சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு - தகவலுக்காக.
3. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம் - தகவலுக்காக.
4. கணக்காய்வாளர் நாயகம், தேசிய கணக்காய்வு அலுவலகம் - தகவலுக்காக.
5. மேலதிக பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந.பொ.
6. பிரதான கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந.பொ.
7. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந.பொ.
8. பிரிவுத் தலைவர்கள், (வாழ்வாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், சமுதாய அடிப்படை அமைப்புகள், சட்டம், மனிதவள அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்புரி, நுண் நிதி, தகவல் தொழில்நுட்பம், முன்னேற்றம் மற்றும் மதிப்பீடு) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - திட்டங்களை செயற்படுத்துவதற்கும் மற்றும் உ.ந.பொ.
9. தலைமையக / சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்க / வங்கி முகாமையாளர்கள் / கருத்திட்ட முகாமையாளர்கள் - தகவலுக்காகவும், உ.ந.பொ.

Translate by :-
I. Aliyar
District Director ( Ret.)

## சமூக வலுவூட்டல் வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல் - 2025

## வலுவூட்டலுக்காக அடையாளம் காணப்பட்ட அஸ்வெசும சமூக நலன்புரி நன்மைகளை பெறுவோர் மற்றும் சமுர்த்தி நலனுதவி நன்மைகளை பெற்ற (தற்போது அஸ்வெசும சமூகநலனுதவி பெறாதவர்கள்) குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்குமான குடும்ப அபிவிருத்தி திட்டமிடலை தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல்.

**01. அறிமுகம் :-**

சமூக வலுவூட்டல் திட்டத்தின் கீழ் அஸ்வெசும சமூக நலன்புரி நன்மைகளை பெறும் பயனாளிகள் மற்றும் சமுர்த்தி நலனுதவிகளை பெற்ற (தற்போது அஸ்வெசும சமூக நலனுதவிகளை பெறாதவர்கள்) குறைந்த வருமானம் பெறுவோரில் வலுவூட்டுவதற்கு தகுதியான குடும்பங்களை அடையாளம் காண்பதற்கான ஆலோசனைகள் ஏற்கனவே சமுர்த்தி சுற்றுநிருப இலக்கம் 2025/01 மற்றும் அதற்கான முதலாவது பின்னிணைப்பு மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சமுர்த்தி நலனுதவிகளை பெற்று வந்த குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களை கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் அடையாளம் காணல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிக்கையிடல் பணிகள் ஏற்கனவே நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், அஸ்வெசும சமூக நலன்புரி நன்மைகளை பெறும் பயனாளிகளில் இருந்தும் இத்தேசிய வேலைத் திட்டத்திற்கு குடும்பங்களை அடையாளம் காண்பதற்கு தொடர்புடைய பயனாளிகளின் பட்டியல் ஏற்கனவே கிடைக்கப்பெற்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப் பணியின் மேலும் ஒரு படியாக, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் வலுவூட்டுவதற்காக ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட பயனாளிக் குழுக்களுக்கு மாத்திரம் குடும்ப அபிவிருத்தி திட்டமிடலை தயாரிப்பதற்கு தேவையான ஆலோசணைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்கே இச் சுற்றுநிருப இணைப்பு வெளியிடப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**02. அடையாளம் காணப்பட்ட அஸ்வெசும சமூக நலன்புரி பயனாளிகளின் அடிப்படைத் தகவல்களைச் சேகரிப்பதற்கான படிவங்களை பூரணப்படுத்தல்.**

2.1. அஸ்வெசும சமூக நலன்புரி நன்மைகளைப் பெறும் பயனாளிகளில் 2025 ஆம் ஆண்டுக்குள் வலுவூட்டுவதற்கு பொருத்தமான குடும்பங்களை அடையாளம்காண சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் பட்டியல் அனுப்பப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளின் தொடர்புடைய கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு அஸ்வெசும பயனாளி குடும்பத்தினதும் அடிப்படைத் தகவல்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். இதற்கு கிராம சேவையாளர் பிரிவிற்கு பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் படிவம் - 01 இன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட படிவத்தைப் பயன்படுத்தி தொடர்புடைய தகவல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு தொடர்புடைய குடும்பத்தை நேரில் சந்தித்து தரவு / தகவல்களைச் சேகரிக்க வேண்டும்.

சமுர்த்தி நலனுதவிகளை பெற்ற பயனாளிகளுக்கு (அஸ்வெசும நலன்புரி நன்மைகளை பெறாதவர்கள்) ஏற்கனவே இணைப்பு 01 மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன, எனவே அவர்களின் தகவல்களை மீண்டும் பெறவேண்டிய அவசியம் இல்லை.

2.2. உரிய கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் பயனாளிகள் தொடர்பாக சேகரிக்கப்படும் தகவல்களை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கும் பொருட்டு கணினி நிரல் நிலை வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படும். எனவே உங்களது சொந்த தொலைபேசி/ கணினி அல்லது சமுர்த்தி வங்கியில் இப்பணிக்கென ஒதுக்கப்பட்டுள்ள கணினியைப் பயன்படுத்தி தரவுகளை உள்ளிடல் வேண்டும். இது தொடர்பாக தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் எதிர்காலத்தில் ஆலோசனைகள் வழங்கப்படும்.

**03. அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்கான குடும்ப அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தல்.**

3.1 அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் படிவம் - 02 ஐப் பயன்படுத்தி குடும்ப அபிவிருத்தி திட்டத்தினை 02 பிரதிகளில் தயாரிப்பது கட்டாயமாகும். இத் திட்டமிடல் கிராம அலுவலர் பிரிவில் பணியாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரால் தயாரிக்கப்படல் வேண்டும். தயாரிக்கப்பட்ட குடும்ப அபிவிருத்தி திட்டத்தின் 02 பிரதிகளையும் வெவ்வேறாக பயனாளி மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் ஆகிய இருவரினதும் பொறுப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

3.2. குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடலே வலுவூட்டல் திட்டத்தின் பிரதான ஆவணமாகும். எனவே திட்டமிடல் படிவத்தை பூர்த்தி செய்வதற்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பின்பற்றி சரியாகவும் மற்றும் தெளிவாகவும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

i. மேலும், குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடலை தயாரித்தல் தொடர்பாக களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கும் பணிகள் தற்போது சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதான பயிற்சியாளர்கள் (Master Trainers) ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே இவ்வாலோசனைகளை பின்பற்றி குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடலை தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

ii. குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடல் படிவம் பின்வரும் பிரிவுகளை கொண்டுள்ளது. எனவே அந்த ஒவ்வொரு பிரிவுகளினதும் தகவல்களை உள்ளடக்கி திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

- வலுவூட்டப்பட வேண்டிய பிரிவு /துறை
- இலக்குகள்
- இலக்குகளை அடைய எடுக்க வேண்டிய படிமுறைகள்
- தேவையான வளங்கள்
- சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு இணைப்புச் செய்ய வேண்டிய பிரிவு /தேவையான உதவிச் சேவைகளை வழங்கும் நிறுவனம் / உத்தியோகத்தர்.
- இலக்குகளை அடைய வேண்டிய ஆண்டு மற்றும் மாதம்

iii. வலுவூட்டப்பட வேண்டிய பிரிவு /துறைகளை அடையாளம் காணுதல்.

பின்வரும் பிரதான துறைகளின் கீழ் இலக்கு மற்றும் ஏனைய பிரிவுகளுக்கான தகவல் மற்றும் தரவுகளை உள்ளடக்கிய விதத்தில் குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடல் தயாரிக்கப்படல் வேண்டும்.

01. வாழ்வாதார அபிவிருத்தி

02. சேமிப்பு மேம்பாடு

03. சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் கல்வி

04. குடும்ப உறவுகள் மற்றும் இயக்கவியல்.

05. சமூக அமைப்பின் (பொதுமக்களின்) பங்கேற்பு

06. வீடு மற்றும் அடிப்படை வசதிகள்.

iv. பிரதான துறைக்குரிய இலக்குகளை தயாரித்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய திட்டங்கள் / பணிகளை அடையாளம் காணுதல்.

1) தெரிவு செய்யப்பட்ட குடும்பம் ஒன்றுக்கான இலக்குகளை அறிமுகம் செய்யும்போது கீழ் குறிப்பிடும் விதத்தில் பிரதான துறைகளுக்கான இலக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

| தொ.இல. | இலக்கு | இலக்குகளை அடைவதற்கு தேவையான கருத்திட்டம் |
|---|---|---|
| 01. | வருமானம் உழைக்கும் முறையினை விருத்தி செய்வதன் ஊடாக குடும்பத்தின் மாதாந்த வருமானத்தை ரூபா 40,000 மாக உயர்த்துதல். | ➢ அடையாளம் காணப்பட்ட குடும்ப வருமானத்தினை அதிகரிக்க கூடிய கருத்திட்டம் / வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல்.<br>➢ குடும்ப அங்கத்தவர்களில் 18 - 45 வயதுக்கிடைப்பட்ட நபர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கி தொழில் வாய்ப்பு (உள்நாட்டு / வெளிநாட்டு) மற்றும் சுயதொழில் / வியாபாரத்தில் இணைப்பு செய்தல்.<br>➢ பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களை செயத்திறன்மிக்க பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல். |

| | | |
|---|---|---|
| 02. | மாதாந்தம் உழைக்கும் வருமானத்தில் 05% - 10% தொகையினை வங்கியில் சேமிக்க தூண்டல்.<br><br>ஊம்: குடும்பத்தின் மாதாந்த வருமானம் ரூ. 40,000 எனின் உயர்ந்த பட்சம் ரூ. 4000 தொகையினை சேமித்தல். | ➢ வியாபாரம் / வேலை வாய்ப்பின் ஊடாக அல்லது வேறு வருமானம் உழைக்கும் வழியில் ஈடுபட்டு பெறும் வருமானத்தில் ஒரு பகுதியை சமுர்த்தி வங்கியில் செலுத்தி சேமிக்க தூண்டுதல். அதற்கேற்ப அவர்களை விழிப்பூட்டல்.<br>➢ சேமிப்புக் கணக்கு இல்லாத நபர்களுக்கு புதிய கணக்கைத் திறப்பதற்கு வசதி செய்தல்.<br>➢ அவசரநிலைகள் / அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்த வேண்டிய விதத்தில் ஒரு தொகையினை சேமித்தல்<br>➢ வேறு விடயங்கள் (குறிப்பிடவும்) |
| 03. | சுகாதாரம் போசாக்கு மற்றும் கல்வி | ➢ பாடசாலைக் கல்விகற்க வேண்டிய ஆனால் பாடசாலை செல்லாத பிள்ளைகளை கல்வி கற்பதற்கு வழிசெய்தல்.<br>➢ ஒரு குடும்பம் நிலையான வருமான மார்க்கம் இல்லாமையால் அல்லது சிக்கனமின்மையால் நாளாந்த பிரதான உணவு வேளைகளில் உணவு உண்ணாமல் இருப்பின் அதற்கான தடைகளை நீக்கி, உரிய முறையில் உணவு வேளைகளில் உணவைப் பெற்றுக் கொள்ள வசதி செய்தல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்.<br>➢ வேறு விடயங்கள் (குறிப்பிடவும்) |
| 04 | குடும்ப உறவுகள் மற்றும் இயக்கவியல். | ➢ குடும்ப உறுப்பினர்கள் போதைப்பொருள் / மதுபான பழக்கத்திலிருந்து விடுபட உதவுதல்.<br>➢ மொபைல் போன்களுக்கு அடிமையான குழந்தைகளை அதிலிருந்து விடுபட உதவுதல்.<br>➢ குடும்ப அங்கத்தவர்களில் எவரேனும் மனநலக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டிருப்பின் அவர்களுக்கு ஆலோசனை, உதவிகளை வழங்குதல்.<br>➢ கடன் பொறியில் சிக்கி இருப்பின் அதிலிருந்து விடுபட உதவுதல்.<br>➢ வேறு விடயங்கள் (குறிப்பிடவும்) |
| 05. | சமுதாயமட்ட அமைப்புகளில் பங்கேற்பு | ➢ சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளில் உறுப்பினராகுதல்.<br>➢ அமைப்பின் தலைமைத்துவம் அல்லது பொறுப்புக்களை பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>➢ சிறு குழுக்களில் சேர்தல் மற்றும் செயல்பாடுகளில் இணைதல்.<br>➢ வேறு விடயங்கள் (குறிப்பிடவும்). |
| 06. | வீடு மற்றும் அடிப்படை வசதிகள் | ➢ தேசிய அடையாள அட்டை இல்லையென்றால் அதனைப் பெற்றுக் கொள்ளல்.<br>➢ நிரந்தர வீடொன்று இல்லையென்றால் அதனை நிர்மாணிக்க நடவடிக்கை எடுத்தல்.<br>➢ குடியிருக்கும் வீடு பாதுகாப்பானதாக இல்லையெனின் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.<br>➢ வேறு விடயங்கள் (குறிப்பிடவும்). |

2.) இப்பிரதான 06 இலக்குகளின் கீழ் ஏற்கனவே சில இலக்குகளை அடைந்த குடும்பங்கள் இருப்பின் அந்த இலக்கை கைவிட்டு ஏனைய பிரிவுகளுக்கான இலக்குகளை நிர்ணயிக்க அவர்களை தயார்படுத்த வேண்டும். மேலும், பிரதான இலக்குகளை அடைய எடுக்க வேண்டிய நடவடிக்கைகளில் ( பணிகளில்) ஏதேனும் நடவடிக்கைகளை

பயனாளி ஏற்கனவே ஆரம்பித்து/ முடித்திருப்பின் அப்பணிகளை தவிர்த்து ஏனைய பணிகளை மேற்கொள்வது தொடர்பாக குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடலில் உள்ளடக்குதல் வேண்டும். உதாரணமாக: சேமிப்பை 5% - 10% ஆக அதிகரிக்கும் சேமிப்பு இலக்கின் கீழ், ஏற்கனவே சேமிப்புக் கணக்கு இருந்தால் கணக்கு திறக்கும் பணியைக் குறிப்பிடுவது தேவையற்றது.

i. அடையாளம் காணப்பட்ட குடும்பத்தின் வாழ்வாதார அபிவிருத்திக்கான இலக்கின் மூலம் மாத வருமானத்தை ரூ. 40,000 ஆக அதிகரிக்கும் போது ஒரே குடும்பத்திற்கு 01 அல்லது அதற்கு மேற்பட்ட பணிகள் / திட்டங்களையும் தயாரிக்க முடியும்.
   1. வியாபார வாய்ப்புகள் அல்லது சுயதொழில் மூலம் வருமானத்தை அதிகரித்தல்.
   2. குடும்பத்தின் இளைஞர் / யுவதிகளுக்கு தொழில் பயிற்சி வழங்கி அவர்களை ஒரு வேலைக்கு அல்லது ஒரு தொழிலைத் தொடங்க வழிகாட்டல்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் இந்த 02 வாய்ப்புகளுக்கும் பயிற்சி மற்றும் அறிவுரைகள் வழங்க முடியும். ஆனால் நிதி உதவி வசதிகள் ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமே வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும் தற்போது செயற்படுத்தப்படும் முறைகளின் கீழ் வழக்கம் போல் சமுர்த்தி வங்கிக் கடன் வசதிகளை வழங்குவதில் எந்தத் தடையும் இல்லை.

ii. வாழ்வாதார அபிவிருத்தி பிரிவுக்கான இலக்குகளை நிர்ணயிக்கும் போது இலங்கையில் அதிகளவு சாத்தியப்பாடுகள் (Feasibility), சந்தை வாய்ப்புகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அதிகம் காணப்படும் துறைகள் எவையென 13 மாவட்டங்களில் வளத்திரட்டுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆவணப் பட்டியல் படிவம் 02 இன் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

குடும்ப அபிவிருத்திக்கான திட்டங்களைத் தயாரிக்கும்போது இச்சந்தை வாய்ப்புகள் மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்து பயனாளிகளுக்கு தெளிவூட்டி அதற்கேற்ப இலக்குகளை அடையத் தேவையான திட்டங்கள் அல்லது செயல்பாடுகளை உள்ளடக்குவது பொருத்தமானதாக அமையும். மேலும் இந்த ஆவணத்தில் குறிப்பிடப்படாத ஏற்கனவே பயனாளியால் மேற்கொள்ளப்பட்டு வரும் அல்லது எதிர்காலத்தில் செயற்படுத்த எண்ணியுள்ள வியாபார / வேலைவாய்ப்புத் திட்டங்களையும் குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடலில் உள்ளடக்க சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது.

iii.) வாழ்வாதார அபிவிருத்தி பிரிவின் கீழ் வருமானத்தை அதிகரிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்களில் இளைஞர்களை தொழில் பயிற்சிக்கு இணைப்பு செய்தல், பின்னர் அதனைத் தொடர்ந்து வேலைவாய்ப்பு/ வியாபார வாய்ப்புகளை ஆரம்பித்தல் போன்ற விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இங்கு சந்தை பகுப்பாய்வு மூலம் அடையாளம் காணப்பட்ட வேலைவாய்ப்புகள் மற்றும் தற்போதைய தொழிற்சந்தையில் அதிக கேள்வியுள்ள தொழில் வாய்ப்புகள் தொடர்பான தகவல்கள் குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடல் படிவத்தில் (படிவ இலக்கம் - 02) இணைக்கப்பட்டுள்ளது என்பதையும் மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலை வாய்ப்பை மையமாகக் கொண்டு இளைஞர் யுவதிகளுக்கு வழங்கப்படும் தொழிற் பயிற்சிக்கான பாடநெறி கட்டணங்களை வழங்க விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**v. குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடலுக்கு அமைய தேவையான வளங்களை அடையாளம் காணுதல்.**

வாழ்வாதார அபிவிருத்தி உள்ளிட்ட ஏனைய பிரிவுகளின் இலக்குகளை அடைய பயனாளியினால் அடையாளம் காணப்பட்ட/ கோரப்படும் வளங்கள் என்ன என்பதை அறிந்து இங்கு குறிப்பிடல் வேண்டும். அதன்படி வளங்கள் தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

i. நிதி உதவிகள் (மானியங்கள் / கடன் வசதிகள்)
ii. தொழில்நுட்ப அறிவு
iii. பயிற்சி
iv. முகாமைத்துவ பயிற்சி
v. ஆலோசனைச் சேவைகள்
vi. மருத்துவ ஆலோசனை / சிகிச்சைகள்

**vi.** நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய வெளியார் நிறுவனங்கள் / அதிகாரிகளிடமிருந்து ஏதேனும் அறிவு / பயிற்சி / சேவைகள் என்பன தேவைப்படும்போது அதனை குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடலில் தொடர்புடைய பந்தியில் அரச நிறுவனங்கள் / தனியார் நிறுவனங்கள் / தன்னார்வ அமைப்புகள் /அதிகாரிகள் / தனிநபர்கள் பற்றிய தகவல்கள் குறிப்பிடப்படல் வேண்டும். இங்கு உரிய சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு மிகப் பொருத்தமான நிறுவனங்கள் எது என்பது தொடர்பாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தெளிவூட்டல்களை மேற்கொள்ள வேண்டும்.

உதாரணமாக :- தொழில் பயிற்சி வழங்க வேண்டிய அவசியம் ஏற்படும்போது அப்பணியைச் செய்யும் அரசு/ தனியார் நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் சேர்க்கப்படல் வேண்டும்.

இது தொடர்பான தகவல்கள் படிவம் - 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**vii. இலக்குகளை நிறைவு செய்வதற்கான காலம்**

குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடலில் இந்த இலக்குகளை அடைவதற்கான ஒரு குறிப்பிட்ட காலத்தை பயனாளியுடன் கலந்துரையாடி குறிப்பிட வேண்டும். இங்கு வாழ்வாதார மேம்பாட்டுத் பிரிவு தொடர்பான மாதாந்த வருமானத்தை அதிகரிக்கும் செயற்பாட்டிற்கு நீண்ட காலம் வழங்கப்படலாம். அதிகபட்சம் 36 மாதங்கள். இருப்பினும் எனைய இலக்குகளை குறுகிய காலத்தினுள் நிறைவு செய்வதற்கு ஏற்றவிதத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தை நிச்சயிக்க பயனாளிகளுக்கு தேவையான வழிகாட்டல்களை வழங்குவது மிகவும் பொருத்தமானதாக அமையும்.

**3.3.** வலுட்டல் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்க, உலக வங்கி என்பவற்றின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் முன்னோடி திட்டத்தின் கீழ் தேரிவு செய்யப்பட்ட பயனாளி குடும்பங்களுக்கு இக் குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடலை தயாரிக்கும் செயல்முறை ii கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டாலும் , தேசிய திட்டத்தின் கீழ் ஒரே கட்டமாகவே குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடல் தயாரிக்கப்படுகிறது. பயனாளி குடும்பங்களின் தேவைகளை அடையாளம் காண்பதை விரைவுபடுத்தவும், நேரத்தைக் குறைக்கவும் இந்த முறையில் மாற்றம் செய்யப்பட்டது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**3.4**. தெரிவு செய்யப்பட்ட பயனாளி குடும்பங்களுக்கான குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடலை தயாரிப்பது தொடர்பான அறிவையும், புரிதலையும் வழங்குவதற்கு ஏற்ற விதத்தில் படிவ இலக்கம் - 03 இல் தயாரிக்கப்பட்ட குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடலின் மாதிரி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**4.0 படிவங்களை அச்சுடுதல் மற்றும் செலவுகளை மேற்கொள்ளல்.**

4.1 அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை தகவல்கள் சேகரிப்பு படிவத்தினை (படிவம் - 01) சமுர்த்தி வங்கியின் செலவில் அச்சிட்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்க வேண்டும். இந்தப் பணி சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் முகாமையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

4.2 மேலும், குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடலை தயாரிக்கும் படிவத்தினையும் (படிவம் - 02) சமுர்த்தி வங்கிகள் அச்சிட்டு ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் தேவையான எண்ணிக்கையிலான பிரதிகளை வழங்க வேண்டும்.

அச்சிடுவதற்கு செலவிடப்பட்ட தொகையினை ”சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து மீளழிப்புச் செய்யப்பட வேண்டிய நிதிக் கணக்கில்” (குறியீட்டு இல. - 3309) பதிவு வைத்தல் வேண்டும். அதன் பின்னர், மாவட்ட சமுர்த்தி பிரிவின் ஊடாக திணைக்களத்திலிருந்து தொடர்புடைய நிதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மாவட்ட சமுர்த்தி பிரிவுகள் உங்களது மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு சமுர்த்தி வங்கியும் செய்த செலவுகள் குறித்த அறிக்கையைத் தயாரித்து வாழ்வாதார அபிவிருத்தி பிரிவிற்கு அனுப்பி தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**5.0. அபிவிருத்தித் பிரிவினால் வேலைத் திட்டங்கள் / கருத்திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்.**

i. வியாபார திட்டங்களைத் தயாரிப்பது குறித்த வழிமுறைகள் மற்றும் பொருத்தமான படிவங்கள் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

ii. வலுவூட்டல் திட்டத்தின் கீழ் பொருளாதார /சமூக /உளவள துறைகளின் கீழ் கருத்திட்டங்கள் /வேலைத் திட்டங்களை செயல்படுத்துவது தொடர்பான பொறுப்புகள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் உரிய பிரிவுகளுக்கு வழங்கப்படும். மேலும் எதிர்காலத்தில் சுற்றறிக்கை வழிகாட்டல்கள் மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடுகள் என்பனவும் பிரிவுகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**6.0. வலுவூட்டல் திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் வாழ்வாதார அபிவிருத்திக்கு பின்வருமாறு நிதி உதவிகள் /கடன் வசதிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.**

- திறைசேரி நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிதி வசதிகளை வழங்குதல்.
- சமுர்த்தி வங்கிகள் ஊடாக திறைசேரி நிதி ஒதுக்கீட்டின் கீழ் வட்டி இல்லாத /சலுகை வட்டி விகிதங்களின் கீழ் புதிய கடன் திட்டங்களை அறிமுகம் செய்தல்.
- சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் சமுர்த்தி நலனுதவிகளை பெற்ற (தற்போது அஸ்வெசும நிவாரணம் பெறாத) பயனாளிகளுக்கு நிதி வசதிகளை வழங்குதல்.
- தற்போதுள்ள சமுர்த்தி வங்கிக் கடன் திட்டங்களின் கீழ் கடன் வசதிகளை வழங்குவதற்கு முன்னுரிமை அளித்தல்.
- சமுர்த்தி "ரன்பத்" கடன் திட்டத்தை வலுவூட்டல் வேலைத்திட்டத்துடன் ஒருங்கிணைத்து கடன்களை வழங்க தேவையான வசதிகளை வழங்குதல்.

**7.0** அடையாளம் காணப்பட்ட சமுர்த்தி மானியங்களைப் பெற்ற (தற்போது அஸ்வெசும நிவாரணம் பெறாத) குறைந்த வருமானம் கொண்ட பயனாளிகள் மற்றும் தற்போது பெயர் பட்டியலை அனுப்பி உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் அஸ்வெசும சமூக நலனுதவிகளை பெற்று வரும் பயனாளிகளின் அடிப்படைத் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் அவர்களுக்கான குடும்ப அபிவிருத்தி திட்டமிடலை தயாரித்தல் நடவடிக்கைகள் **2025.06.16** ஆம திகதிக்கு முன்னர் முடிக்கப்படல் வேண்டும்.

**8.0** இச்சுற்றறிக்கை ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பாக கிராம அலுவலர் பிரிவுகளில் களக்கடமை புரியும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கு தெளிவூட்டி சுற்றறிக்கையின் பிரதியினை வழங்க சமுர்த்தி வங்கி / வங்கிச்சங்க முகாமையாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும், வலயமட்ட முன்னேற்ற முதளாய்வுக் கூட்டங்கள், மற்றும் மாதாந்தக் கூட்டங்களில் இதன் முன்னேற்றத்தை மேற்குறித்த அலுவலர்கள் பின்தொடர்ந்து கண்காணிப்பு செய்தல் வேண்டும்.

**9.0 கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் அஸ்வெசும சமூக நலனுதவி பெறும் பயனாளிகளை அடையாளம் காணல்.**

சகல மாவட்டங்களும் உள்ளடங்கிய விதத்தில் ஒரு மாவட்டத்தின் ஒரு பிரதேச செயலகப் பிரிவின் அஸ்வெசும பயனாளிகளின் பெயர் பட்டியல் தற்போது உரிய பிரதேச செயலக பிரிவின் ஊடாக கிராம அலுவலர் பிரிவு வரை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியல் ஒவ்வொரு குடும்பத்தினதும் வறுமைத் தரவரிசைக் குறிகாட்டியின் ( Rank Index ) பெறுமதிக்கமைய மிக உயர்வில் இருந்து மிகக் குறைவானது வரை வரிசைப்படுத்தப்படு தயாரித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் பிரிவுகளில் பணியாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வறுமைக் குறிகாட்டியின் பெறுமதி மிக உயர்ந்தது முதல் மிகக் குறைவானது வரை கொடுக்கப்பட்ட நியதிகளுக்கு (அளவுகோல்களுக்கு) உட்பட்டு பொருத்தமான குடும்பங்களை அடையாளங்காணல் வேண்டும்.

கிராம அலுவலர் பிரிவில் அடையாளம் காணவேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2025/01 இன் பந்தி இலக்கம் 2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அமைதல் வேண்டும்.

**10.** இப் பணிக்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கைகளை எடுக்குமாறு தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு - 01

## வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு குடும்பம் ஒன்றை தெரிவு செய்வதற்கான தகவல்கள் சேகரிக்கும் படிவம்.

மாகானம் : ..........................................................

மாவட்டம் : ..........................................................

பி. செ. பிரிவ : ..........................................................

சமுர்த்தி வலயம்/வங்கி :..........................................................

கி. சே. பிரிவு : ..........................................................

ச. அ. அமைப்பின் பெயர்: ..........................................................

அங்கத்தவர் இலக்கம் : ..........................................................

HH Number

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | |

| தொடர் இலக்கம் | **தனிநபர் தகவல்கள** :<br>நிரந்தர முகவரி ..........................................<br>..........................................:<br>ஈ.மெயில் ..........................................<br>தொலைபேசி இலக்கம்: ..........................................<br>(தனிநபர்/விண்ணப்பதாரியின் பெயரை முதலிலும் ஏனைய அங்கத்தவர்களின் பெயர்களைபயனாளிக்கு/விண்ணப்பதாரிக்கு உள்ள உறவு முறைக்கு அமைய குறிப்பிடுக) | பிரதான குடியிருப்பாளரின் உறவுமுறை | i ஆண்/பெண | பிறந்த திகதி | தே.அ.அட்டை இலக்கம்/முதியோர் அ.அட்டை இலக்கம் (16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு) | குடியியல் நிலமை | பிரதான தொழிலின் தன்மை | பிரதான பொருளாதாரநடவடிக்கை | இயலாமை நிலை | தொற்றா நோய்கள் | பாடசாலை அல்லது வேறு கல்வி நிறுவனங்களில் பயிலுதல் | பெற்றுள்ள உயர்ந்த கல்வித் தகமை | தொழில்/தொழிநுட்ப பயிற்சி பெற்றுள்ளாரா ஆம்/இல்லை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 01 | | | | | | | | | | | | | |
| 02 | | | | | | | | | | | | | |
| 03 | | | | | | | | | | | | | |
| 04 | | | | | | | | | | | | | |
| 05 | | | | | | | | | | | | | |
| 06 | | | | | | | | | | | | | |
| 07 | | | | | | | | | | | | | |
| 08 | | | | | | | | | | | | | |

| குடும்பத்தின் சராசரி மாதாந்த வருமானம் (ரூ) | குடும்பத்தின் சராசரி மாதாந்த செலவு (ரூ) |
|---|---|
| RS: | RS: |

**11. பிரதான தொழிலின் தன்மை**

| | | | |
|---|---|---|---|
| அரச உத்தியோகத்தர் | 1 | சுயதொழில் | 6 |
| அரசு சார்ந்த பணியாளர் | 2 | கொடுப்பனவு பெறாமல் குடும்ப நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் | 7 |
| தனியார் துறை பணியாளர் | 3 | மாணவர் | 8 |
| வேலை செய்வதில்லை (முதுமை/இயலாமை) | 4 | ஓய்வு பெற்றவர் | 9 |
| வேலை தேடுபவர் | 5 | சேவை வழங்குபவர் | 10 |

**12. பிரதான பொருளாதார நடவடிக்கை**

| | | | |
|---|---|---|---|
| விவசாயம் | 1 | வியாபாரம் | 8 |
| மீன்பிடி | 2 | போக்குவரத்து | 9 |
| கால்நடை வளர்ப்பு | 3 | கைத்தொழில் | 10 |
| சுரங்கத் தொழில் | 4 | நாட்கூலி | 11 |
| நிர்மான/தச்சு/மேசன் | 5 | சேவை | 12 |
| குடிசைக் கைத்தொழில் | 6 | மாதாந்தம் வேதனம் பெறுவோர | 13 |
| சுயதொழில் | 7 | வேறு | 14 |

**13. NVQ பிரிவு**

| | |
|---|---|
| மேசன் | 1 |
| தச்சு | 2 |
| நீர் இணைப்பு | 3 |
| வெல்டிங் | 4 |
| மின் கைத்தொழில் | 5 |
| A/C பொருத்துதல் | 6 |
| ICT/ IT | 7 |
| அலுமினியம் | 8 |
| வேறு (குறிப்பிடவும்) | |
| | 9 |
| | 10 |
| | 11 |
| | 12 |
| | 13 |
| | 14 |
| | 15 |
| | 16 |

**வாழ்வாதாரத் திட்டத்திற்கு இதற்கு முன்னர் வழங்கிய உதவிகள்**

| | |
|---|---|
| கடந்த 5 வருடங்களினுள | பெறுமதி |
| உபகரணங்கள் | |
| பயிற்சிகள் | |
| சேவைகள் | |

**குடுபத்தில் உள்ள சேமிப்புகள் ரூபா.**

| | |
|---|---|
| சேமிப்பு வைப்பு | |
| நிலையான வைப்பு | |
| முதலீடுகள் | |
| கட்டாய சேமிப்பு | |

| குடும்ப அங்கத்தவர் வெளிநாட்டில் வசிக்கிறார்களா | ஆம் | இல்லை |
|---|---|---|
| என்னற காரணத்திற்காக | | |
| கல்வி | | |
| வேலைவாய்ப்பு | | |
| நிரந்தரம் | | |
| வேறு | | |

**03. நிரல் பிரதான குடியிருப்பாளரின் உறவுமுறை**

| | | | |
|---|---|---|---|
| பிரதான குடியிருப்பாளா | 1 | அம்மா | 8 |
| மனைவி | 2 | அப்பா | 9 |
| கணவன் | 3 | பேரன் | 10 |
| மகன் | 4 | பேத்தி | 11 |
| மகள் | 5 | உறவினர் | 12 |
| மருமகன் | 6 | வேறு | 13 |

**04. தொற்றா நோய்கள**

| | |
|---|---|
| இருதய நோய் | 1 |
| நீரிழிவு நோய் | 2 |
| புற்று நோய | 3 |
| உயர் குருதி அமுக்கம | 4 |
| சிறுநீரக நோய் | 5 |
| மனநோய் | 6 |
| වෙනත් | 7 |

**05. நிரல் கல்வித் தகைமை**

| | |
|---|---|
| பாடசாலை செல்லவில்லை | 1 |
| 5 ஆம் ஆண்டு சித்தி | 2 |
| 8 ஆம் ஆண்டு சித்தி | 3 |
| க.பொ.த (சா.த) சித்தி | 4 |
| க.பொ.த (உ.த) சித்தி | 5 |
| பட்டதாரி | 6 |
| முதுமானிப் பட்டம் | 7 |
| விசேட கல்வி கற்றவர்/கற்பவர் | 8 |
| 1 ஆம் ஆண்டில் படித்த/படிக்கின்றவர் | 9 |
| NVQ சான்றிதழ் பெற்றவர் | 10 |

**06. பாடசாலையில் அல்லது வேறு கல்வி நிறுவனத்தில் பயிலுதல்**

| | |
|---|---|
| முன்பள்ளி | 1 |
| பாடசாலை | 2 |
| பல்கலைக்கழகம் | 3 |
| தொழில் நுட்பம்/தொழில் பயிற்சி நிறுவனம் | 4 |

**07. இயலாமை நிலை**

| | | | |
|---|---|---|---|
| மனநலக் குறைவு | 1 | முள்ளந்தண்டு நோய் | 5 |
| பல குறைபாடுகள | 2 | மந்த புத்தி | 6 |
| பெரும் மூளை | 3 | முழுமையான பேச்சு மற்றும் கேட்டல் குறைபாடு | 7 |
| அங்கங்கள் முடக்கம் | 4 | முழுமையான கண்பார்வை இன்மை | 8 |

**08. குடியியல் நிலமை**

| | |
|---|---|
| திருமணமாகதவர் | 1 |
| திருமணமானவர்/ஒன்றாக வாழ்பவர் | 2 |
| அனாதை | 4 |
| விவாகரத்து பெற்றவர் | 5 |
| பிரிந்து வாழ்பவர் | 6 |

| **09. குடிநீர் வசதி** | | **எரிசக்தி** | |
|---|---|---|---|
| கிணறு | | மின்சாரம் | |
| பிரதான நீர் இணைப்பு | | மண்ணெண்னை | |
| பொதுக்கிணறு | | சூரிய சக்தி | |
| கிராமிய நீர் வழங்கள் திட்டம் | | மின் பிரப்பாக்கி/மண்கலம் | |
| நிரந்தரம் இல்லை | | நிரந்தர வசதி இல்லை | |

பயனாளியின் அஸ்வெசும இலக்கம் |  |

2025/....../.......
பிரதேச செயளாலர்
பிரதேச செயலகம்

.........................

**<u>சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் வருவூட்டல் வேலைத்திட்டத்தின் வழிகாட்டல்களை பின்பற்றி பயனாளி ஆகுவதற்கு சம்மதம் தெரிவித்தல்</u>**

__________________________எனும் நான் இத்திட்டத்தின் கீழ்வரும் 05 முக்கிய விடயங்களையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்தமான பயனாளி தொடர்பான அனைத்து விளக்கங்களையும் மற்றும் ஆழமான புரிதலையும் பெற்றுள்ளேன்.

1. இவ் வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் பயிற்சிகள், பயிற்சி வழங்கள் மற்றும் வழிகாட்டல் அமர்வுகள் வாழ்வாதார நடவடிக்கைகள் மற்றும் வழக்கமான கூட்டங்கள் உட்பட அனைத்து நடவடிக்கைகளும் செயற்பாட்டுடன் பங்கேற்றல்.
2. திட்ட உத்தியோகத்தர்களுடன் முழுமையான மற்றும் தொடர்ச்சியான தொடர்பைப் பேணுவதுடன் உண்மையான தகவல்களை வழங்குதல்.
3. இத் திட்டத்தின் மூலம் அறிமுகம் செய்யப்படும் கிராமிய சேமிப்புக் குழுக்களில் செயற்பாடுள்ள உறுப்பினராக இருத்தல்.
4. உரிய உத்தியோகத்தர்களின் வழிகாட்டலின் கீழ் ஒரு வாழ்வாதார திட்டத்தினை தயாரித்தல்.
5. வாழ்வாதார திட்டம் வேலைவாய்ப்புத் திட்டங்களை செயற்படுத்துவதற்கான நிதி உதவியைப் பெறுவதற்கு முன்பு குடும்ப அபிவிருத்தித் திட்டம் மற்றும் வாழ்வாதார / வேலைவாய்ப்புத் திட்டத்தை தயாரித்த பின்னர் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்பமிடல்

திட்டத்தின் அறிமுக நிகழ்வு உட்பட அனைத்து முறைசார் மற்றும் செயற்பாட்டு திட்டங்களில் செயற்பாட்டுடன் பங்கு பற்றாது விடின் அல்லது போலியான போலியான தகவல்களை வழங்கியிருப்பின் இத் திட்டத்தின் அங்கத்துவத்தை நான் இழப்பேன் என்பதை நான் அறிந்துள்ளேன்.இத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட எந்த ஒரு சொத்தையும் வேறு யாருக்கும் பொறுப்புக் கொடுக்கவோ, உரிமை மாற்றவோ, விற்பனை செய்யவோ, அழிக்கவோ அல்லது அடமானம் வைக்கவோ முடியாது என்பதை நான் முழுமையாக அறிந்துள்ளேன்.

இவ் வலுவூட்டல் திட்டத்தில் ஒரு செயற்பாடுள்ள பங்கேட்பாளாராக இருப்பதற்கும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு உண்மையானதும் மற்றும் சரியானதுமான தகவல்களை வழங்குவேன் எனவும் நான் இத்தால் தெரியப்படுத்துகிறேன்.

முழு பெயர் :- ..................................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் :-..........................................

அங்கத்தவர் கையொப்பம் : - ..................... திகதி :-..............................

பொறுப்பேற்கும் அலுவலரின் பெயர் :- .......................................

பி.செ.பிரிவு :- ........................ கி.சே. பிரிவு :- ...................................

அலுவலர் ஒப்பம் :- ................... திகதி:- .....................

| நீங்கள் வசிக்கும் வீடு உங்களுக்கு/உங்கள் குடும்ப அங்கத்தவருக்கு/அங்கத்தவர்களுக்கு சொந்தமானதா | ஆம் | இல்லை |
|---|---|---|
| | | |
| உங்கள் வீடு எப்போதாவது அணர்த்தங்களுக்கு முகம் கொடுத்துள்ளதா | ஆம் | இல்லை |
| ஆம் எனின் | | |

| வெள்ளன் | | வரட்சி | | சூறாவளி | |
|---|---|---|---|---|---|
| காட்டு மிருகங்களால் ஏற்படும் பாதிப்பு | | | | | |
| வேறு (விளக்குக) | | | | | |

| **<u>வசிக்கும் வீட்டின் தகவல்கள்</u>** | | **கூரை** | |
|---|---|---|---|
| நிரந்தரம் | | ஓடு/அஸ்பெஸ்டஸ் | |
| தற்காலிகம் | | துகரம் | |
| அனுமதியில்லாதது | | ஓலை/வைக்கோல்/பனையோலை | |
| வாடகை | | **சுவர்** | |
| லயன் வீடு | | செங்கல்/வுளொக்கல் | |
| **சதுர பரப்பு** | | களிமண் | |
| 250 அடிக்கு குறைவு | | புலகை/தகரம் | |
| 250-500 | | ஓலை/பனையோலை | |
| 500-700 | | **தரை** | |
| 750 க்கு மேல் | | சீமெந்து/டைல்/ கொங்றீட் | |
| **வசிக்குமம் வீட்டின் தன்மை** | | களிமண | |
| தனி மாடி வீடு | | பிஹிட் தரை | |
| Annexes | | | |
| கூரை வீடு/லயன் வீடு/குடிசை | | | |
| வேறு (குறிப்பிடுக) | | | |

| **குடும்பத்தின் மொத்த கடன் தொகை (ரூபா)** | | |
|---|---|---|
| கடன் வகை | பிரதான குடியிருப்பாளர் | ஏனைய அங்கத்தவர்கள் |
| சமுர்த்தி வங்கி | | |
| வேறு நிறுவணங்கள் | | |
| முறைசாறா கடன் வழங்குனர்கள் | | |

| **கடன் விபரங்கள்** | | |
|---|---|---|
| கடன் பெற்ற காரணம் | பெற்ற கடன் தொகை | மீதி (ரூ) |
| வீடமைப்பு | | |
| வருமானமீட்டல் | | |
| வாழ்வாதாரம் | | |
| வேறு | | |

| **குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை** | | | | | |
|---|---|---|---|---|---|
| **இனம்:** | சிங்களம் | தமிழ் | முஸ்லிம் | வேர்கர் | மலே |
| **வழுவூட்டல் திட்டம் :** | தேசிய லைத்திட்டம் | | | | |
| | ADB முன்னோடி திட்டம் | | | | |
| | WB முன்னோடி திட்டம் | | | | |
| **பெண் தலைமை தாங்கும் குடுமபமா** | | | ஆம் | இல்லை | |
| **வறுமை அளவீட்டுக்கான குறிகாட்டி** | | | | | |

**வீடு/காணியின் தகவல்கள் .**

உங்களுக்கு / குடும்ப அங்கத்தவர்களுக்கு சொந்தமாயின

| காணியின் தன்மை | ஏக்கர் | றூாட் | பேர்ச் | சந்தைப் பெறுமதி |
|---|---|---|---|---|
| பயிர்ச் செய்கை காணி | | | | |
| தரிசு நிலம் | | | | |

| **குடும்ப அங்கத்தவர்களுக்கு வேறு காணி உண்டா** | **ஆம்** | **இல்லை** |
|---|---|---|
| | | |

| **அக் காணியின் அளவு** | **ஏக்கர்** | **றூாட்** | **பேர்ச்** |
|---|---|---|---|
| | | | |

| **வலுவூட்டல் வகைப்படுத்தலுக்கு அமைய நீங்கள் உள்ள இடம்** | |
|---|---|
| மிக வறியவர் | |
| வறியவர் | |
| பாதிக்கப்படக் கூடியவர | |
| ஒத்திசைவானவர | |
| சமுர்த்தி | |
| குறைந்த வருமானம் பெறுவோர் | |

| **கழிப்பறை வசதி** | |
|---|---|
| வீட்டினுள் உள்ளது | |
| வீட்டிற்கு வெளியில் | |
| நீரடிப்பு மலகூடம் | |
| பொது மலகூடம் | |
| கழிப்பறை வசதியில்லை | |

| **உங்களுக்கு / குடும்ப அங்கத்தவர்களுக்கு சொந்தமான வேறு சொத்துக்கள்** | |
|---|---|
| **வாகனம் :-** | |
| **வாகன வகை:-** | **இலக்கம்:-** |
| மோட்டார் சைக்கில் | |
| முச்சக்கர வண்டி | |
| கார் | |
| வேன் / ஜீப் | |
| பஸ் | |
| லொறி / டிப்பர் | |
| லேன் மாஸ்ட்டர் (டயர் - 2) | |
| உளவு இயந்திரம் (டயர்-4) | |
| **பொருளாதார நடவடிக்கைக்கான இயந்திரங்கள் மற்றும் உபகரங்கள்** | |
| உபகரண வகை | எண்ணிக் கை |
| மோட்டார் இயந்திரப் படகு | |
| மோட்டார் இல்லாத படகு | |
| அறுவடை இயந்திரம் /ஒன்றினைந்த அறுவடை இயந்திரம் | |
| வேறு மீன்பிடி/ விவசாய உபகரணங்கள் | |
| வேறு சுயதொழில் இயந்திரங்கள் | |
| **கால்நடை வளர்ப்பு/மீன்வளர்ப்பு/வியாபாரம்** | |
| **கால் நடை** | **எண்ணி க்கை** |
| மாடுகள் | |
| ஆடுகள | |
| பன்றிகள் | |
| கோழிகள்/ வாத்துக்கள் | |
| மீன் வளர்ப்பு அலகு | |

இணைப்பு - 02

# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

## மக்களை வலுவூட்டும் வேலைத்திட்டம் 2025 – குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடல்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. வீட்டிலக்கம் ( HH Number) - | | | 2. தே. அ. அ. இலக்கம் (NIC) :- ------------------------------ | | | |
| 3. மாகாணம் : | | | 4. மாவட்டம் : | 5. பிரதேச செயலகப் பிரிவு : | | |
| 6. சமுதாய அடிப்படை வங்கி : | | | 7. கிராம சேவகர் பிரிவு : | | | |
| 8. பயனாளியின் பெயர் : | | | | | | |
| 9. முகவரி : | | | | | | |
| **இலக்கம்** | **பிரிவு** | **இலக்கு** | **இலக்கை அடைவதற்கு தேவையான கருத்திட்டம்/விடயம்** | **இலக்கை அடைவதற்கு தேவையான வளங்கல்** | **நிறுவனத்திற்கு/உத்தியோகத்தரிடம் முன்னிலைப்படுத்த வேண்டியது அவசியமா? ஆம்/இல்லை** | **இலக்கை பூர்த்தி செய்யும் வருடம் அல்லது மாதம்** |
| 1 | வாழ்வாதார அபிவிருத்தி | 1. குடும்ப வருமானத்தை ரூ.40000.00 வரை அதிகரித்தல்<br>• வியாபாரத்துக்கான வாய்ப்புக்கள்<br>• வேலைதேடும் இளைஞர்/யுவதிகனை பொருத்தமான வேலைக்கு இணைப்பு செய்தல் | | | | |
| 2 | சேமிப்பு மேம்பாடு | 1. மாதாந்த வருமானத்தில் 05% - 10% தை சேமிக்கச் செய்தல் | | | | |
| 3. | சுகாதாரம், போசாக்கு மற்றும் கல்வி | 1. பாடசாலை செல்லவேண்டிய வயதில் பாடசாலை செயல்லதா பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புதல்<br>2. கர்ப்பிணித் தாய்மார்களை சிகீச்சை பெற பரிந்துரை செய்தல்<br>3. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்<br>4. நோய் வாய்ப்பட்டவர்களை மருத்துவ சிசீச்சை பெற பரிந்துரை செய்தல் | | | | |
| 4 | குடும்ப உறவுகள் மற்றும் இயக்கவியல் | 1. போதைப்பொருள் மற்றும் மதுபாவனையில் இருந்து மீள்தல்<br>2. கைத்தொலைபேசி பாவனைக்கு அடிமையாதலில் இருந்து மீள்தல்<br>3. உள ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்தல்<br>4. கடன் பழுக்களில் இருந்து விடுபட்ட குடும்பமாக இருத்தல் | | | | |
| 5 | சமூக அமைப்புக்களில் பங்கேற்றல் | 1. சமூக குழுக்களில் இணைந்து அங்கத்துவம் பெறல்<br>2. புதிய சமூக குழுக்களை ஆரம்பித்தல் | | | | |
| 6. | வீடு மற்றும் அடிப்படை வசதிகள் | 1. தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளல்<br>2. வீட்டின் தேவைகளை பூர்த்தி செய்தல்<br>3. சுத்தமான குடிநீர் தேவையை பூர்த்தி செய்தல்<br>4. மலசலகூட வசதிளை பெற்றுக் கொள்ளல் | | | | |

❖ குடும்பத்தில் தொழில் வர்ப்பை எதிர்பார்த்திருக்கும பிள்ளையின் பெயர் :- .............................................................................. வயது :-................ ஆண்/பெண் நிலை :-.............

❖ மேற்படி இலக்குகளை நான் மற்றும் எனது குடும்ப அங்கத்தவர்களுடன் கலந்துறையாடி எங்களது விருப்பத்திற்கமைய தயாரித்துள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கினறோம்

பயனாளியின் ஒப்பம் :- -------------------- திகத :- -------------------

❖ மேற்படி தகவல்கள் பங்குபற்றும் குடும்பத்கின் பிரதான குடியிருப்பாளர் மற்றும் ஏனைய அங்கத்தவர்களுடன் கலந்துறையாடி அவர்க்ள விருப்பத்திற்கமைய பெறப்பட்டுள்ளது என்பதை ............................................ கிராம சேவையாளர் பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் -------------------------------------------- ஆகிய என்னால் உறுதிப்படுத்தப்படுகின்றது

சமுர்த்தி அபிவிருத்ததி உத்தியோகத்தர் கையொப்பம் :- --------------------------- திகதி :- --------------------

| உற்பத்தி வியாபார வகைகள் | | | |
|---|---|---|---|
| வேக்கரி உற்பத்திகள் | கொய்யா உற்பத்தகள் (கிலோ கொய்யா) | பால் உற்பத்தி | பன்றி இறச்சி உற்பத்தி |
| வாழைப்பழச் செய்கை | நன்னீர் மீன்வளர்ப்பு | பால் பொருள் உற்பத்தி (பால் டொபி, தயிர், நெய்) | அன்னாசி உற்பத்தி |
| தேன் உற்பத்தி | இயந்திரங்கள் திருத்துதல் | கருவாடு உற்பத்தி | கோழி வளர்ப்பு (நிரந்தர) |
| வெற்றிலை உற்பத்தி | முருங்கை உற்பத்தி | தும்பு மற்றும் தும்பு சார்ந்த உற்பத்தி | கோழி வளர்ப்பு (இறைச்சிக்காக) |
| Bites உற்பத்தி | காளான் வளாப்பு | தரை விரிப்பு, நுளம்ப வலை உற்பத்தி | சப்பாத்து உற்பத்தி |
| செங்கல் உற்பத்தி | பப்பாசி உற்பத்தி | ஆடு வளர்ப்பு | சினக்ஸ் உற்பத்தி |
| மரவள்ளி பயிரிடல் | கோடித்தோடை உற்பததி | நிலக்கடலை உற்பத்தி | இடியப்பம் மற்றும் உணவுப் பண்ட உற்பத்தி |

**வேலை வாய்ப்புக்களின் வகைகள்**

| | வேலையின் வகை | பாடநெறியின் பயிற்சிக் காலம் | பாடநநெறிககான செலவு ரூ. | செயற்படுத்தும் நிறுவனம் |
|---|---|---|---|---|
| 1 | முச்சக்கர வணடி திருத்துதல் | 18 மாதங்கள் | 56,000.00 | மாவட்ட தொழிற் பயிற்சி நிலையம்- VTA |
| 2 | AC டெக்னிசியன் | 850 மணித்தியாலங்கள் | 30,000.00 | தேசிய தொழிற பயிற்சி நிறுவனம் / NAITA / VTA |
| 3 | குளிரூட்டல் மற்றும் யுஊ திருத்துதல் (விசேட பயிற்சி) | 02 வருடங்கள் | 100,000.00 | ஜேர்மன் டெக் (கைத்ததொழில பொறியியல் நிறுவனம்) |
| 4 | அலுமினியப் பொருள் உற்பத்தி | 06 மாதங்கள் | 15,000.00 | தொழிற பயிற்சி நிறுவனம் - VTA |
| 5 | பேக்கரி உற்பத்திகள் | 06 மாதங்கள் | 41,000.00 | தொழிற பயிற்சி நிறுவனம் - VTA |
| 6 | புதிக் கைத்தொழில | 06 மாதங்கள் (மட்டம் - 3) | 1,000.00 | NAITA |
| 7 | அழகுக் கலை | 06 மாதங்கள் (மட்டம் - 3) | 1,000.00 | NAITA |
| 8 | பைசிக்கிள் திருத்துதல் | 06 மாதங்கள் | 16,000.00 | VTA |
| 9 | Bites உற்பத்திகள் | 01 வருடம் (மட்டம் - 3) | 1,000.00 | NAITA |
| 10 | நோயாளி பராமரிப்பு | 500 மணித்தியாலங்கள் | 25,000.00 | NAITA / VTA |
| 11 | கேட்டரிங் சோவிஸ் | 06 மாதங்கள் | 41,000.00 | VTA |
| 12 | சுமையல் கலை | 100 மணித்தியாலங்கள் | 47,000.00 | VTA |
| 13 | தேங்காய் எண்ணெய் உற்பத்தி | 01 நாள் | இலவசம் | விதாதா வள் நிலையம் |
| 14 | கழிவுப் பொருள் சேகரிப்பு (பிளாஸ்ரிக, பொலிதீன, கடதாசி, சிரட்டை) | இதற்கு விசேட பயிற்சி தேவையில்லை | | |
| 15 | கணிணி, CCTV, சேவா் பனல் நிறுவுதல் சேவை | 06 மாதங்கள் | 24000.00 | VTA |
| 16 | எலக்ரீசியன் | 06 மாதங்கள் | 12000.00 | VTA |
| 17 | எலக்ரிகல் டெக்னீசியன் (விசேட பயிற்சி) | 03 வருடங்கள் | 150000.00 | ஜேர்மன் டெக் நிறுவனம் |
| 18 | மின் வயரிங் | 09 மாதங்கள் (மட்டம் - 3) | 1,000.00 | NAITA |
| 19 | மீன்பிடி வலை தயாரிப்பு | 06 மாதங்கள் | 1,000.00 | NAITA |
| 20 | கிரா∴பிக் டிசைனா் | 06 மாதங்கள் | 24,000.00 | VTA |
| 21 | சலூன் | 30-100 மணித்தியாலங்கள் | 37,000.00 | VTA |
| 22 | ஐகவிணைத் திறன் | 06 மாதங்கள் | 22,000.00 | VTA |
| 23 | கனரக வாகன ஓட்டுனர் | 1- 1 ½ மாதங்கள் | 45,000.00 | ஹய்டக் லங்கா - மாவத்தகம (0372299999, 0777851111) |
| 24 | கனரக வாகன திருத்தம் | 18 மாதங்கள் | 56,000.00 | VTA |
| 25 | இரும்பு வேலை | 06 மாதங்கள் | 1,000.00 | NAITA |
| 26 | ஜுகி மெசின் திருத்தம் | 06 மாதங்கள் | 15,000.00 | VTA |
| 27 | கித்துள் சாா்ந்த உற்பத்திகள் (கித்துள் பாணி, நடுகு) | 03 மாதங்கள் (மட்டம் - 3) | 1,000.00 | NAITA |
| 28 | மேசன் | 03 மாதங்கள் (மட்டம் - 3) | 2,100.00 | VTA |
| 29 | மொபைல் போன் திருத்தம் | 100 மணித்தியாலங்கள் | 13,000.00 | VTA |
| 30 | மோட்டார் மெக்கானிக் | 06 மாதங்கள் | 13,000.00 | VTA |
| 31 | தாதி உதவியாளர் | 09 மாதங்கள் | 1,000.00 | NAITA |
| 32 | வூாகனத்தில் ஓவியம் வரைதல் | 1 ½ வருடங்கள் | 30,000.00 | ஜப்பான் டெக் நிறுவனம் |
| 33 | பிளம்பர் | 02 வருடங்கள் | 60,000.00 | ஜேர்மன் டெக் நிறுவனம் |
| 34 | அறை உதவியாளர் (ஹோட்டல்) | 03 மாதங்கள் | 10,000.00 | VTA |
| 35 | விற்பானை உதவியாளர் (அபான்ஸ், ∴பூட் சிட்டி) | 03 மாதங்கள் | 25,000.00 | VTA |
| 36 | காலணி தயாரித்தல | 06 மாதங்கள் | 12,000.00 | இலங்கை சந்தைப்படுத்தல நிறுவனம் |
| 37 | ஆடை உற்பத்தி | 06 மாதங்கள் | 13,000.00 | VTA |
| 38 | சுற்றுளா வழிகாட்டிகள் | 06 மாதங்கள் | 13,000.00 | VTA |
| 39 | வூாகன பராமரிப்பு (குசன் பண்ணல், பழுதுபார்த்தல்) | 06 மாதங்கள் | 15,000.00 | VTA |
| 40 | வாகன டிங்கரிங் | 1 வருடம், 06 மாதங்கள் | 30,000.00 | VTA |
| 41 | வெல்டிங் | 06 மாதங்கள் | 10,000.00 | VTA |
| 42 | வெல்டிங் (விசேட பயிற்சி) | 3 வருடங்கள | 150,000.00 | ஜேர்மன் டெக் நிறுவனம் |

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

மக்களை வலுவூட்டும் வேலைத்திட்டம் 2025 – குடும்ப அபிவிருத்திக்கான திட்டமிடல் இணைப்பு - 03

MODEL

| | | |
|---|---|---|
| 1. வீட்டிலக்கம் ( HH Number) - 421 | 2. தே. அ. அ. இலக்கம் (NIC) :- 1970xxxxxxxx | |
| 3. மாகாணம் : மத்திய மாகானம் | 4. மாவட்டம் : மாத்தளை | 5. பிரதேச செயலகப் பிரிவு : ரத்தோட்ட |
| 6. சமுதாய அடிப்படை வங்கி : பள்ளேபரகம | 7. கிராம சேவகர் பிரிவு : சதுன்கம | |
| 8. பயனாளியின் பெயர் : C. A. ரத்நாயக | | |
| 9. முகவரி : இல. 20/2, அரலிய மாவத்த, சதுன்கம | | |

| இலக்கம் | பிரிவு | இலக்கு | இலக்கை அடைவதற்கு தேவையான கருத்திட்டம்/விடயம் | இலக்கை அடைவதற்கு தேவையான வளங்கல் | நிறுவனத்திற்கு/உத்தியோகத்தரிடம் முன்னிலைப்படுத்த வேண்டியது அவசியமா? ஆம்/இல்லை | இலக்கை பூர்த்தி செய்யும் வருடம் அல்லது மாதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வாழ்வாதார அபிவிருத்தி | 1. குடும்ப வருமானத்தை ரூ.40000.00 வரை அதிகரித்தல்<br>• வியாபாரத்துக்கான வாய்ப்புக்கள்<br>• வேலைதேடும் இளைஞர்/யுவதிகளை பொருத்தமான வேலைக்கு இணைப்பு செய்தல் | பேக்கரி உற்பத்திகள் | • மூலதனம்<br>• கேஸ் சிலின்டர்1, மிக்ஸ் கிரைன்டர்1<br>• புதிய உபகரணங்களை பாவிப்பதற்கான பயிற்சி | ஆம், விதாதா நிலையம் | 2026.12.31 |
| 2 | சேமிப்பு மேம்பாடு | 1. மாதாந்த வருமானத்தில் 05% - 10% தை சேமிக்கச் செய்தல் | சேமிப்பு கணக்கினை ஆரம்பித்தல் | ------------ | ஆம் | 2026.01.31 |
| 3. | சுகாதாரம், போசாக்கு மற்றும் கல்வி | 1. பாடசாலை செல்லவேண்டிய வயதில் பாடசாலை செயல்லதா பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புதல்<br>2. கர்ப்பிணித் தாய்மார்களை சிகிச்சை பெற பரிந்துரை செய்தல்<br>3. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்<br>4. நோய் வாய்ப்பட்டவர்களை மருத்துவ சிகிச்சை பெற பரிந்துரை செய்தல் | இல்லை, குடும்பத்திலுள்ள சுகயீனமான குழந்தையை அரச வைத்தியசாலையில் மாதாந்தம் சிகிச்சைக்காக அனுப்புதல் | இல்லை | ஆம் | 2025.1025 |
| 4 | குடும்ப உறவுகள் மற்றும் இயக்கவியல் | 1. போதைப்பொருள் மற்றும் மதுபாவனையில் இருந்து மீள்தல்<br>2. கைத்தொலைபேசி பாவனைக்கு அடிமையாதலில் இருந்து மீள்தல்<br>3. உள ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்தல்<br>4. கடன் பழுக்களில் இருந்து விடுபட்ட குடும்பமாக இருத்தல் | • பிரதான குடியிருப்பாளரை மது பாவனையில் இருந்து விடுவிக்க ஆலோசனை வழங்குதல்<br>• முறைசாரா நிதி நிறுவணங்களிடம் இருந்து பெற்ற 50000.00 கடன் தொகையினை செலுத்தி முடித்தல் | • கடன் தொகையை மீளச் செலுத்த விசேட கடன்<br>• ஆலோசனைச் சேவை | • சமுராததி வங்கி<br>• ஆலோசனைச் சேவை உத்தியோகத்தர் | 2026.12.31<br>2026.12.31 |
| 5 | சமூக அமைப்புக்களில் பங்கேற்றல் | 1. சமூக குழுக்களில் இணைந்து அங்கத்துவம் பெறல்<br>2. புதிய சமூக குழுக்களை ஆரம்பித்தல் | சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்துவத்தை பெற்றுக்கொள்ளல் | இல்லை | கிராமத்தின் சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர்/செயலாளர் | 2026.1031 |
| 6. | வீடு மற்றும் அடிப்படை வசதிகள் | 1. தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளல்<br>2. வீட்டின் தேவைகளை பூர்த்தி செய்தல்<br>3. சுத்தமான குடிநீர் தேவையை பூர்த்தி செய்தல்<br>4. மலசலகூட வசதிளை பெற்றுக் கொள்ளல் | அரைகுறை நிலையில் இருக்கும் வீட்டு வேலைகளைப் பூரணப்படுத்தல் | வீடமைப்பு கடன் பெறல் | சமுர்த்தி வங்கி முகாமையாளர் | 2026.06.30 |

❖ குடும்பத்தில் தொழில் வர்ய்ப்பை எதிர்பார்த்திருக்கும பிள்ளையின் பெயர் :- ........................................................................... வயது :-................ ஆண்/பெண் நிலை :-..............

❖ மேற்படி இலக்குகளை நான் மற்றும் எனது குடும்ப அங்கத்தவர்களுடன் கலந்துறையாடி எங்களது விருப்பத்திற்கமைய தயாரித்துள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கினறோம்

பயனாளியின் ஒப்பம் :- -------------------- திகத :- -------------------

❖ மேற்படி தகவல்கள் பங்குபற்றும் குடும்பத்கின் பிரதான குடியிருப்பாளர் மற்றும் ஏனைய அங்கத்தவர்களுடன் கலந்துறையாடி அவர்க்ள விருப்பத்திற்கமைய பெறப்பட்டுள்ளது என்பதை

............................................ கிராம சேவையாளர் பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ------------------------------------------- ஆகிய என்னால் உறுதிப்படுத்தப்படுகின்றது

சமுர்த்தி அபிவிருத்ததி உத்தியோகத்தர் கையொப்பம் :- --------------------------- திகதி :- ---------------------

MODEL